10.06.2016

தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**தமிழகத்தில் இன்று மழை பெய்ய வாய்ப்பு: வானிலை ஆய்வு மையம் தகவல்**

தமிழ்நாட்டில் இன்று (வெள்ளிக்கிழமை) சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வுமைய இயக்குனர் எஸ்.பாலச்சந்திரன் கூறியதாவது:–

தென் மேற்கு பருவமழை கர்நாடகத்தில் தீவிரம் அடைந்துள்ளது. தமிழ்நாட்டில் இன்று (வெள்ளிக்கிழமை) சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். தென் மாவட்டங்களில் சில இடங்களிலும், வட மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் மழை பெய்யும். சென்னையில் வானம் மேக மூட்டமாக காணப்படும். சென்னையின் சில பகுதிகளில் மாலை அல்லது இரவில் மழை பெய்ய வாய்ப்பு உண்டு என்று தெரிவித்தார்.

**கார் பருவ சாகுபடிக்காக பாபநாசம் அணை திறப்பு**



தாமிரவருணி பாசனத்தில் கார் பருவ சாகுபடிக்கான ஆரம்பகட்டப் பணிகளுக்காக பாபநாசம் அணையில் இருந்து வியாழக்கிழமை தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரவருணி பாசனத்திற்குள்பட்ட விவசாய நிலங்களில் கார் சாகுபடிக்காக ஜூன் 1ஆம் தேதி தண்ணீர் திறந்துவிடப்படுவது வழக்கம். நிகழாண்டு மணிமுத்தாறு அணையில் இருந்து பாசனத்துக்காக ஜூன் 1இல் தண்ணீர் திறந்துவிடப்பட்ட நிலையில், பாபநாசம் அணையில் போதிய நீர் இருப்பு இல்லாததால் தண்ணீர் திறந்துவிடப்படவில்லை.

இந்நிலையில், கடந்த சில தினங்களாக பாபநாசம் உள்ளிட்ட நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை பெய்து வருவதால் தண்ணீர் வரத்து அதிகரித்தது. இதையடுத்து, தமிழக முதல்வரின் உத்தரவுப்படி, பாபநாசம் அணையில் இருந்து வியாழக்கிழமை தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அணையிலிருந்து தண்ணீரை மாவட்ட ஆட்சியர் மு.கருணாகரன் திறந்துவிட்டார்.

முதல்கட்டமாக விநாடிக்கு 600 கனஅடி நீÔó திறந்துவிடப்பட்டுள்ளது. இதன்மூலம் தாமிரவருணி பாசனத்திற்குள்பட்ட வடக்கு மேலழகியான் கால்வாய், நதியுண்ணி

கால்வாய், கன்னடியன் கால்வாய், கோடகன் கால்வாய், மற்றும் பாளையங்கால்வாய் ஆகிய கால்வாய்களின் கீழ் உள்ள நேரடி மற்றும் மறைமுக பாசன வசதி பெறும் 20 ஆயிரத்து 595 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும். ஜூன் 9ஆம் தேதிமுதல் 31-10-16 வரை தண்ணீர் திறந்துவிடப்படும் என ஆட்சியர் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் சேரன்மகாதேவி சார் ஆட்சியர் வி. விஷ்ணு, அம்பாசமுத்திரம் வட்டாட்சியர் இருதயராஜ், பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் சுப்பிரமணியன், கண்காணிப்புப் பொறியாளர் அப்துல் ஹமீது, மின்வாரிய செயற்பொறியாளர் குழந்தைவேலு, உதவி செயற்பொறியாளர் சீனிவாசன், உதவிப் பொறியாளர்கள் வளர்மதி (மின்வாரியம்), சுப்பிரமணியன், மகேஸ்வரன் (பொதுப்பணித் துறை), விக்கிரமசிங்கபுரம் நகர்மன்றத் தலைவி மனோன்மணி உள்பட பலர் கலந்துகொண்டனர்.

## அகத்தியர் மலையில் 150 மிகவும் அரியவகை மூலிகைத் தாவரங்கள்



திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அகத்தியர் மலையில் மிகவும் அரிய வகை மூலிகைத் தாவரங்கள் 150-க்கும் மேற்பட்டவை உள்ளதாக, களக்காடு

முண்டன்துறை புலிகள் காப்பக தலைமை வனப் பாதுகாவலர் ஏ. வெங்கடேஷ் தெரிவித்தார்.

திருநெல்வேலி கொக்கிரகுளத்தில் உள்ள மாவட்ட அறிவியல் மையத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற உலக சுற்றுச்சூழல் தின விழாவுக்கு வந்த அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

இந்தியாவின் மிகப்பெரிய மலைத்தொடராக உள்ள மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி 1.60 லட்சம் கி.மீ. கொண்டது.

6 மாநிலங்களை இணைக்கும் இந்த மலை, பல்லுயிர்ப் பெருக்கத்துக்கு முக்கியக் காரணியாக உள்ளது. உலகளவில் உயிர்பன்மை கொண்ட வனங்களில் 8-ஆவது இடத்தை இந்த மலை பெற்றுள்ளது. புலி, கரடி, மான், மிளா, காட்டெருமை, யானை உள்பட ஏராளமான வன உயிரினங்கள் இங்குள்ளன. புலிகள் வாழ உகந்ததாகவும் இந்த மலைப் பகுதி உள்ளது.

2014-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி இந்தியா முழுவதும் மொத்தம் 2,226 புலிகள் இருப்பது தெரியவந்துள்ளது. தமிழகத்தில் களக்காடு முண்டன்துறை, முதுமலை, நீலகிரி, சத்தியமங்கலம் ஆகிய பகுதிகளில் 4 புலிகள் சரணாலயங்கள் உள்ளன. இவற்றில் 229 புலிகள் இருப்பது தெரியவந்துள்ளது. 2015-ஆம் ஆண்டுக்கான கணக்கெடுப்பு முடிந்துள்ள நிலையில் அதன் அறிக்கை வெளியிடப்படவில்லை.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அகத்தியர் மலையில் ஏராளமான மூலிகைத் தாவரங்கள் உள்ளன. நீராதாரத்துக்கு வழிவகுக்கும் அடர்ந்த காடுகளும், மழைப்பொழிவு அதிகம் பெறும் காடுகளும் உள்ளன. 150-க்கும் மேற்பட்ட உலகளவில் மிகவும் அரிய வகை மூலிகைத் தாவரங்கள் அகத்தியர் மலையில் இருப்பது தெரியவந்துள்ளது. நீராதாரம் நிலைத்திருக்க வேண்டுமானால் அதற்கு காடுகளைப் பாதுகாக்க வேண்டியது மிகவும் அவசியம்.

உலக சுற்றுச்சூழல் தினத்தையொட்டி ஆண்டுதோறும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. சுற்றுச்சூழல் என்பது அனைவருக்குமானது. அதில் சமரசம் செய்ய முடியாது. சுற்றுச்சூழலைப் பேணிக்காக்க விழிப்புணர்வு, செயல்பாடு ஆகியவை முக்கியம். மாணவர் - மாணவிகளிடையே சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வை அதிகரிக்கவே இத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. வன விலங்குகளையோ அவற்றிலிருந்து செய்யப்படும் பொருள்களையோ விற்க மாட்டோம் என்ற நோக்கத்துடன் நிகழாண்டு சுற்றுச்சூழல் தின விழிப்புணர்வு

மேற்கொள்ளப்படுகிறது. சுற்றுச்சூழல் சரியாக இருக்க உணவுச் சங்கிலி அமைப்பு சரியாக இருக்க வேண்டும். காடுகளை எடுத்துக்கொண்டால் புலிகள் தங்களுக்கான இரைகளை வேட்டையாட வேண்டியது முக்கியம். அதேபோல, யானைகளுக்கு பாதை வகுத்துக் கொடுக்க வேண்டும். யானைகளை காடுகளின் பொறியாளர் என்கின்றனர். யானைகள் செல்லும் வழியைப் பயன்படுத்தித்தான் அனைத்து வேட்டை மிருகங்கள், சிறு வன உயிரினங்கள் செல்கின்றன. அவை வழி அமைக்காவிட்டால் பல உயிரினங்கள் நீர்நிலைகளை அடைய வாய்ப்பில்லாமல் போய்விடும். இதுபோன்ற இயற்கையான செயல்பாடுகள் தானாக நடைபெற வேண்டும். இல்லையெனில் சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டு பருவநிலை மாற்றம், மழைப்பொழிவு குறைதல், வறட்சி அதிகரித்தல் உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகள் ஏற்படும். இதனால் காடுகளையும், வன விலங்குகளையும் பாதுகாக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் வனப் பகுதிகளில் வேட்டையைத் தடுக்கும் வகையில் திருக்குறுங்குடி முதல் கடையம் வரை பல்வேறு பகுதிகளில் 110 வேட்டைத் தடுப்புக் காவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தவிர வனப் பகுதியை ஒட்டியுள்ள குடியிருப்புகளைச் சேர்ந்தோரையும் கொண்ட பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தக் குழுக்களில் தலா 5 பேர் இடம் பெறுவர். இவர்கள் வனத்துக்குள் அத்துமீறி சந்தேகத்துக்கு இடமளிக்கும் வகையில் நுழைவோர், வனவிலங்குகளை வேட்டையாடுவோரைத் தடுக்க உதவுவர். இதுதவிர, 2 சதுர கி.மீ.க்கு ஒரு கேமரா வீதம் 400-க்கும் மேற்பட்ட கண்காணிப்புக் கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. அவற்றின் மூலமும் கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது என்றார் அவர்.

## பூத்துக் குலுங்குகிறது கொன்றை மலர்

செங்கல்பட்டு, திருவடிச்சூலம், திருப்போரூர், திருக்கழுகுன்றம் ஆகிய பகுதிகளில் மலைகளிலும், சாலையோரங்களிலும் கொன்றை மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன.

மஞ்சள் நிறத்தில் பூக்கும் கொன்றை மலர்கள் மலைப்பகுதிகளிலும் சாலை ஓரங்களிலும் பூத்து சரம் சரமாகத் தொங்கும் காட்சி, வாகன ஓட்டிகளுக்கும் நடந்து செல்பவர்களுக்கும் கண்களுக்கு விருந்தாக உள்ளது.

கொன்றை மலர் மருத்துவ குணமும் உடையது. இதன் இலை, பூ, முருங்கையைப் போல தோற்றம் முடைய காய்கள் அனைத்துமே சித்த மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகின்றன.

கோடை வெயிலில் மரம், செடி, கொடிகள் தண்ணீரின்றிக் காய்ந்து காட்சியளிக்கும் இக்காலத்திலும், கொன்றை மலர் பூத்துக் குலுங்குவது, நடந்து செல்பவர்களை அன்னாந்து பார்க்கச் செய்கிறது.

## குறைந்த செலவில் அதிக லாபம் தரும் உளுந்துப் பயிர்!

புரதச்சத்து மிகுந்த உளுந்து, குறுகிய காலத்தில், மிகக்குறைந்த செலவில் விவசாயிகளுக்கு அதிக லாபத்தை அளிக்கும் பயிராக உள்ளது. விழுப்புரம் மாவட்டத்தில், பயறு வகைகள் சாகுபடியில் 90 சதவீதம் உளுந்து பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. மாவட்டத்தின் தட்பவெப்ப நிலையும், மண்வளமும் உளுந்து பயிர் சாகுபடிக்கு உகந்ததாக உள்ளது.

அதன் சாகுபடி குறித்து விழுப்புரம் வேளாண் இணை இயக்குநர் வி.ரவி கூறியது:

உளுந்துப் பயிரில் வன்பன் 3, வம்பன் 4, வம்பன் (பிஜி) 5, வம்பன் (பிஜி) 6, வம்பன்(பிஜி) 7, டிடி 9 ஆகிய ரகங்கள் உள்ளன. கோடைப்பருவத்தில் வம்பன் 5, வம்பன் 6, டிடி 9 பயிரிடலாம். ஆடிப்பட்டத்தில் (ஜுன்,ஆகஸ்ட்) வம்பன் 3, வம்பன் 4, வம்பன் 5, வம்பன் 6 பயிரிடலாம்.

விதையளவு: ஒரு ஏக்கருக்கு 8 கிலோ (ஹெக்டேருக்கு 20 கிலோ).

விதை நேர்த்தி: விதை மூலம் பரவும் பூஞ்சான் நோய்களை கட்டுப்படுத்த விதைப்பதற்கு 24 மணி நேரத்துக்கு முன்பு, ஒரு கிலோ விதையில் கார்பண்டசிம் 20 கிராம் அல்லது திரம் 4 கிராம் அல்லது டிரைகோடெர்மோ விரிடி 4 கிராம் என்ற அளவில் கலந்து விதைப்பு செய்ய வேண்டும்.

உயிர் உர விதை நேர்த்தி: வேர் முடிச்சுகள் காற்று மண்டலத்தில் உள்ள தழைச்சத்தை பூமியில் நிலை நிறுத்தும் பொருட்டு ஒரு ஹெக்டேருக்கு தேவையான 20 கிலோ விதைக்கு 3 பொட்டலங்கள் (200 கிராம்) ரைசோபியத்தை 750 மில்லி, ஆறிய அரிசி கஞ்சியுடன் சேர்த்து விதைப்புக்கு 30 நிமிடத்துக்கு முன்பு கலந்தும், அதனை நிழலில் உலர்த்தி விதைப்பு செய்ய வேண்டும். பாஸ்போ பாக்டீரியா உயிர் உரத்தையும் கலந்து விதைக்கலாம்.

விதைப்பு: வரிசைக்கு வரிசை 30 செ.மீ, செடிக்குச் செடி 10 செ.மீ. இருக்கும்படி, இதற்கான விதைப்புக் கருவியை பயன்படுத்தி விதைப்பு செய்வதால், பயிர் எண்ணிக்கையை பராமரிக்க முடியும். வேளாண் மையங்களில் தேவையான விதைகள் தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

நீர் நிர்வாகம்: விதைத்த நாளில் முதல் தண்ணீரும், 3ஆவது நாளில் இரண்டாவது தண்ணீரும் பாய்ச்சுவதோடு, தொடர்ந்து மண்ணின் தன்மைக்கு ஏற்ப 10 முதல் 15 நாள்கள் இடை வெளியிலும், பூக்கும் பருவம் மற்றும் விதை பிடிக்கும் தருணங்களிலும் நீர் பாய்ச்ச வேண்டும்.

களைக்கட்டுப்பாடு: ஒரு ஹெக்டேருக்கு 2 லிட்டர் புளூகுளோரலின் அல்லது பெண்டிமெத்திலின் களைக்கொல்லியை 300 லிட்டர் தண்ணீரில் கலந்து விதைத்த 3 நாள்களுக்குள் தெளித்து களையை கட்டுப்படுத்தலாம். களைக்கொள்ளியை நிலத்தில் ஈரம் இருக்கும் போது பயன்படுத்த வேண்டும், தெளித்த மூன்று நாள்களுக்குள் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

உரம் இடுதல்: ஹெக்டருக்கு 12.5 டன் தொழு உரமும், பாஸ்போபாக்டீரியா 10 பொட்டலங்களை 25 கிலோ தொழு உரத்துடன் கலந்து இட வேண்டும்.

மண் மாதிரி பரிசோதனை முடிவின்படி அல்லது பொது சிபாரிசாக, இறவை பயிருக்கு 25 கிலோ தழைச்சத்து, 50 கிலோ மணிச்சத்தை இட வேண்டும். தேவையெனில் ஜிப்சம் 110 கிலோ இடுவதால் கூடுதல் மகசூல் கிடைக்கும்.

உளுந்து பயிரில் அதிக மகசூல் பெறவும், திரட்சியான காய்கள் பெறவும் 2 சதவீதம் டிஏபி கரைசலை விதைப்பு செய்த 25ஆவது நாள் (பூக்கும் பருவம்) மற்றும் 15 நாள் கழித்து மறுமுறையும் தெளிக்க வேண்டும். நிலத்தில் ஈரம் இருக்கும் போது இக்கரைசலை தெளிக்க வேண்டும்.

பயிர் பாதுகாப்பு: நல்ல கோடை உழவு, வயல் வரப்புகளை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். பூச்சிநோய் எதிர்ப்பு திறன் கொண்ட விதை ரகங்களை பயன்படுத்த வேண்டும். விதை நேர்த்தி செய்து விதைத்தல், விளக்குப்பொறி, இனக்கவர்ச்சிப் பொறி வைத்து ஆண் அந்துப்பூச்சிகளை ஒழித்தல் வேண்டும்.

அறுவடை: விதைப்பு செய்த 65 முதல் 75 நாள்களுக்குள் செடிகளில் உள்ள காய்கள் நன்கு முற்றி காய்ந்தவுடன் செடியைப் பிடுங்கி காய்களை பிரித்தெடுத்து சுமார் 10 சதவீதம் ஈரப்பதத்தில் சேமிக்க வேண்டும்.

பயறுவகையை இளம் வெயிலில் உலர்த்தி மருந்து தெளிக்காமல் சேமித்து வைப்பதோடு, தேவையெனில் உளுந்தை உடைத்து சேமித்து வைத்தால் பூச்சிகளின் சேதாரம் இருக்காது.

உளுந்து பயறு வகைகளின் தேவை அதிகரித்து வரும் நிலையில், மிகக்குறைந்த செலவில், குறைந்த நீருடன், குறுகிய காலத்தில் அதிகப்படியான லாபம் தரும் என்பதால், மேற்கூறிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி உளுந்து பயிரிட்டு விவசாயிகள் நன்மை பெறலாம்.

## குறுவை நெல் சாகுபடி தொழில்நுட்பங்கள்



நடவு வயலில் குறுவை நெல் சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் இராஜா. ரமேஷ், ரெ. பாஸ்கரன் ஆகியோர் தெரிவித்தது:

நடவு வயல் தயாரிப்பு கோடைமழை கிடைத்தவுடன் நிலத்தை 2 - 3 தடவை உழுதுவிடுவதால், மண்ணில் நீர்பிடிப்புத் தன்மையை அதிகரிக்கச் செய்து பயிருக்குத் தேவைப்படும் நீர்த் தேவையை குறைக்கலாம். மேலும், களைகளை கட்டுப்படுத்தப்படுவதுடன், மண்ணிலுள்ள பூச்சிகளின் கூண்டுப்புழுப் பருவம், நோய்க் கிருமிகள் அழிக்கப்படுகின்றன.

கடைசி உழவுக்கு முன்பாக ஒரு ஏக்கருக்கு 5 டன் மக்கிய தொழு உரம் அல்லது 2.5 டன் பசுந்தாள் உரத்தை இட்டு மண்ணுடன் நன்கு கலக்குமாறு செய்ய வேண்டும். கடைசி உழவின்போது, 200 கிலோ ஜிப்சத்தை இட்டு நன்றாக மண்ணுடன் கலந்து சமன் செய்ய வேண்டும். பிறகு 10 கிலோ துத்தநாகசல்பேட் அல்லது 5 கிலோ தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நெல் நுண்ணூட்டக் கலவையை 20 கிலோ மணலுடன் கலந்து சீராக தூவ வேண்டும். மேலும், தலா 4 பாக்கெட் அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போ பாக்டீரியா உயிர் உரங்களை 10 கிலோ தொழு உரத்துடன் கலந்து சீராக தூவ வேண்டும்.

உரமிடுதல்: மண் பரிசோதனை செய்து அதன்படி உரமிட வேண்டும் அல்லது பொதுப் பரிந்துரைப்படி ஏக்கருக்கு 50 : 20 : 20 என்ற அளவில் தழை, மணி மற்றும் சாம்பல் சத்து உரங்களை இடவேண்டும். அதாவது 109, 125 மற்றும் 34 கிலோ யூரியா, சூப்பர் பாஸ்பேட், பொட்டாஷ் உரங்களை இட வேண்டும்.

தழைச்சத்து: 28 கிலோ யூரியாவை அடியுரமாக இடவேண்டும். மீதமுள்ள யூரியாவை தலா 27 கிலோ என்ற அளவில் நடவு நட்ட 15, 30, 45 ஆம் நாள்களில் மேலுரமாக இட வேண்டும்.

யூரியாவுடன் ஜிப்சம் மற்றும் வேப்பம் புண்ணாக்கை 5: 4 :1 என்ற விகிதத்தில் கலந்து இடவேண்டும். அப்போதுதான் யூரியாவிலுள்ள தழைச்சத்து உடனடியாக கிரகிக்கப்பட்டு பூக்கள் மலர்ந்து கருவுற்று அதிக எடையுடன் கூடிய நெல் மணியாக மாறி அதிக விளைச்சலுக்கு வழிவகுக்கும். கடைசி முறையாக இடப்படும் யூரியா மட்டும் எதனுடனும் கலக்காமல் தனியாக இடப்பட வேண்டும். 125 கிலோ சூப்பர் பாஸ்பேட் உரத்தை முழுவதுமாக அடியுரமாக இடவேண்டும்.

சாம்பல் சத்து: 17 கிலோ பொட்டாஷ் உரத்தை அடியுரமாகவும், மீதமுள்ள 17 கிலோ பொட்டாஷ் உரத்தை நடவு நட்ட 30 நாளிலும் இடவேண்டும்.

களை நிர்வாகம்: நாற்று நட்ட 3 ஆம் நாள் ஏக்கருக்கு 1 லிட்டர் பூட்டாகுளோர் அல்லது பிரிட்டிலாகுளோர் அல்லது 45 கிராம் ஆக்ஸாடயர்ஜில் அல்லது 4 கிலோ பென்சல்ப்யூரான் மீதைல் பிரிட்டிலாகுளோர் மருந்துகளில் ஏதாவது ஒரு களைக் கொல்லியை 10 கிலோ மணலுடன் கலந்து சீராக தூவி களைகளைக் கட்டுப்படுத்த வேண்டும்.

நாற்று நட்ட 15 - 20 நாள்களுக்குள் 100 மில்லி பிஸ்பைரிபேக் சோடியம் அல்லது 30 கிராம் அசிம்சல்ப்யூரான் அல்லது 600 கிராம் 2, 4 டி சோடியம் இவற்றுள் ஏதாவது ஒரு மருந்தை 200 விட்டர் தண்ணீரில் கலந்து கட்டுப்படுத்தலாம்.

களைக்கொல்லி இடும்போது வயலில் சிலிர்ப்பு நீர் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். பின்பு 2 - 3 நாள்களுக்கு நீரை வடிக்கக் கூடாது.

நீர் நிர்வாகம்: நெல் வயலுக்கு தொடர்ந்து தண்ணீர் தேங்குவதைத் தவிர்த்து காய்ச்சலும், பாய்ச்சலுமாக நீர்ப் பாய்ச்ச வேண்டும். இதனால் 30 முதல் 40 சதவீதம் தண்ணீர் சேமிக்கப்படுகிறது.

நெற்பயிரின் மிக முக்கிய நீர்த் தேவை பருவங்களான தூர் பிடிக்கும் பருவம், பூக்கும் பருவம், கதிர் உருவாகும் பருவம், பால் பிடிக்கும் பருவங்களில் போதுமான அளவு தண்ணீர் பாய்ச்ச வேண்டும். அறுவடைக்கு 10 நாள்களுக்கு முன்பு தண்ணீர் பாய்ச்சுவதை நிறுத்திவிட வேண்டும்.

இலைவழி ஊட்டச்சத்து: யூரியா 1 சதவீதம் (2 கிலோ ஏக்கருக்கு), டிஏபி 2 சதவீதம் (4 கிலோ ஏக்கருக்கு), பொட்டாஷ் 1 சதவீதம் (2 கிலோ ஏக்கருக்கு) கலவையை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கதிர் உருவாகும்போது ஒரு முறையும், பின்பு 10 நாள்கள் கழித்து ஒரு முறையும் தெளிப்பதனால் நெல் மகசூல் அதிகரிக்கும்.

ஒருங்கிணைந்த பூச்சி நோய் பாதுகாப்பு: நெற்பயிரை தாக்கும் பூச்சி மற்றும் நோய்களால் 30 சதவீதம் வரை விளைச்சல் பாதிக்கப்படுவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. எனவே, கீழ்க்கண்ட ஒருங்கிணைந்த பூச்சி நோய் பாதுகாப்பு முகைளை கடைப்பிடிக்க வேண்டும்.

பூச்சி, நோய்களுக்கு எதிர்ப்புத் திறனுள்ள ரகங்களை பயன்படுத்துவது: கோடை உழவு செய்தல் வேண்டும். அடியுராக வேப்பம் புண்ணாக்கு இடவேண்டும் வயலில்

அதிகளவில் தண்ணீர் தேங்கியிருக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். வயல், வரப்புகளில் களை இல்லாமல் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

தழைச்சத்து உரங்களைப் பிரித்து இடுவது அல்லது இலை வண்ண அட்டையைப் பயன்படுத்தி தழைச்சத்து உரங்களை இட வேண்டும். அதிக நெருக்கம் இல்லாமலும், பட்டம் விட்டும் நடவு செய்தல் வேண்டும்.

விளக்குப்பொறி வைத்து பூச்சிகளின் நடமாட்டத்தை அறிந்து அதற்கேற்ப பூச்சிகளின் எண்ணிக்கை பொருளாதார சேதநிலையைத் தாண்டினால் பரிந்துரைக்கப்பட்ட பூச்சிக்கொல்லி மருந்துகளை உரிய அளவுகளில் பயன்படுத்த வேண்டும். நோய்த் தாக்கப்பட்ட செடிகளை உடனே பிடிங்கி அப்புறப்படுத்த வேண்டும்.

வேப்பெண்ணெய் 3 சதவீதம் அல்லது வேப்பங்கொட்டை கரைசல் 5 சதவீதம் பயன்படுத்த வேண்டும்.

20 சதவீதம் சாணக் கரைசலை (40 கிலோ ஏக்கருக்கு) பயன்படுத்தி பாக்டீரியா இலைக் கருகல் நோயைக் கட்டுப்படுத்தலாம்.

10 சதவீதம் நொச்சி அல்லது காட்டாமணக்கு இலைச் சாறை தெளிப்பதனால் நெல் நிறமாற்ற நோயை கட்டுப்படுத்தலாம். 5 சதவீதம் வசம்பு தெளிப்பதால் கதிர்நாவாய்ப்பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம் என்று அவர்கள் தெரிவித்தனர்.

**நாவல் பழம் சீசன் தொடங்கியது:வரத்துக் குறைவால் விலை அதிகரிப்பு**



நாவல் பழங்களின் சீசன் தொடங்கியுள்ளது. வரத்துக் குறைவால் விலை அதிகரித்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

கருப்பு நிறத்திலும், சதை திரட்சியுடன் காண்போரை நாவில் நீர் ஊற வைப்பது நாவல் பழமாகும். இந்தப் பழத்தின் சீசன் ஜூன் மாதம் தொடங்கி செப்டம்பர் வரையாகும்.

ஆந்திரம், கர்நாடகம் ஆகிய பகுதிகளில் இருந்து சென்னைக்கு கொண்டு வரப்படும் நாவல் பழங்களின் விற்பனை விறுவிறுப்படைந்துள்ளது.

சென்னையில் பல்வேறு பகுதிகளில் தெருவோர பழக்கடைகள், தள்ளுவண்டிகளிலும் குவித்து வைத்து விற்பனை செய்கின்றனர். இதில், அதிக மருத்துவக் குணங்கள் உள்ளதால் பொதுமக்கள் ஆர்வத்துடன் வாங்கிச் செல்கின்றனர்.

இந்தப் பழம் ஆந்திர மாநிலம் கடப்பா, நெல்லூர், நாயுடுபேட்டை, கர்நாடகத்தில் சிமோகா, ஹூப்லி, ஹாசன் ஆகிய இடங்களிலிருந்து சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. தற்போது குறைந்த

அளவில் நாவல் பழம் வரத்து உள்ளது. எனவே, தரத்துக்கு ஏற்ப ஒரு கிலோ ரூ.180 முதல் ரூ.200 வரையில் விற்கப்படுகிறது. விலை அதிகமாக இருப்பதால், 100 கிராம், 200 கிராம் அளவில் மக்கள் வாங்கிச் செல்கின்றனர்.

தமிழகத்தில் விளையும் நாட்டு நாவல் பழங்களில் விதை மட்டுமே பெரிதாக இருக்கும். ஆனால் பெங்களூரு, ஆந்திரப் பகுதிகளில் இருந்து வரவழைக்கப்படும் பழங்களில் நல்ல சதைத் திரட்சியுடன் இருப்பதால், நாட்டுப் பழங்களைவிட இந்தப் பழங்களுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது. நாவல் பழம் வரத்து அதிகரிக்கும்போது விலை குறையும் என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

## இயற்கை விவசாயம்: கோபியில் பயிற்சி முகாம்

கோபி வேளாண் அறிவியல் நிலையத்தில் இயற்கை விவசாயம் குறித்த பயிற்சி முகாம் புதன்கிழமை துவங்கியது.

இப்பயிற்சி முகாம் தொடர்ந்து மூன்று நாள்களுக்கு நடைபெற உள்ளது. இதை திட்ட ஒருங்கிணைப்பாளர் அழகேசன் துவக்கிவைத்தார். இதில், பெருந்துறை, டி.என்.பாளையம், அந்தியூர், தாளவாடி பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் பங்கேற்றனர்.

இதில், இயற்கை விவசாயம், உயிர் உரம் தயாரித்தல், கிராமங்களில் வேளாண் தொழிலை ஊக்குவிப்பது உள்ளிட்டவைகள் குறித்துப் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி பெற்றவர்கள், மாதிரிப் பண்ணையை உருவாக்கி, அதன் மூலம் மற்ற விவசாயிகளையும் இயற்கை விவசாயத்துக்கு ஊக்குவிப்பது குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டது.

## கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 5,100 கால்நடைகளுக்கு காப்பீடு இலக்கு

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 5,100 கால்நடைகளுக்கு காப்பீடு செய்ய இலக்கு நிர்ணயக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து கிருஷ்ணகிரி மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில் வியாழக்கிழமை வெளியிட்ட செய்தி: அசாதாரணமான சூழ்நிலைகளில் கால்நடைகளில் இழப்பு ஏற்படும் போது நேரிடும் பொருளாதார இழப்பை

ஈடுகட்டும் விதமாக, தேசிய கால்நடை காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் காப்பீடு செய்து பயன் பெற கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இந்த திட்டத்தில் ஒரு ஆண்டு காப்பீட்டுத் திட்டம் மற்றும் 3 ஆண்டு காப்பீட்டுத் திட்டம் என இருவகையான திட்டங்கள் உள்ளன. கிருஷ்ணகிரி மாவட்டத்துக்கு என அரசு நிறுவனமான தமிழ்நாடு அபிவிருத்தி முகமையால் 5,100 கால்நடைகள் காப்பீடு செய்ய வேண்டும் என இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

எனவே, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள கால்நடை வளர்ப்பவர்கள் தங்களின் கால்நடைகளில் 2.5 ஆண்டுக்கு மேற்பட்ட வயதுள்ள கறவைப் பசுக்கள், சினைப் பசுக்கள், செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள், கோழி இனங்களை இந்த திட்டத்தில் கீழ் காப்பீடு செய்து பயன் பெறலாம். மேலும், காப்பீடு தொடர்பான விவரங்களுக்கு அருகில் உள்ள கால்நடை மருந்தக உதவி மருத்துவர்களை அணுகி தெரிந்து கொள்ளலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "மண் வளத்தைப் பாதுகாக்க காடுகளின் பரப்பை அதிகப்படுத்துவது அவசியம்

திருமருகல் அருகே திருப்புகலூரில் தமிழ்நாடு வனத்துறை, ஜப்பானின் பன்னாட்டு கூட்டுறவு நிதி நிறுவனம் (ஜிக்கா) ஆகியவை சார்பில், தனியார் நிலங்களில் மரக்கன்று வளர்ப்புத் திட்டம் குறித்த விழிப்புணர்வுக் கூட்டம் வியாழக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு மாவட்ட வன அலுவலர் விஜயா தலைமை வகித்தார். கூட்டத்தில் வனச்சரக அலுவலர் கோபிநாத் பேசியதாவது:

நாட்டில் பசுமை பரப்பை அதிகப்படுத்துதல், காடு வளர்ப்பை அதிகரித்தல், மரக்கன்றுகளை உற்பத்தி செய்து விருப்பமுள்ளவர்களுக்கு அளித்தல் ஆகியவை தனியார் பட்டா நிலங்களில் மரங்கள் வளர்ப்புத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

குறு விவசாயிகளுக்கு 2.5 ஏக்கர் வரையிலும், சிறு விவசாயிகளுக்கு 5 ஏக்கர் வரையிலும் இத்திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்படும். விருப்பமுள்ள மகளிர் சுய உதவிக்குழுவினரும் 100 முதல் 150 கன்றுகள் வரை பெறலாம். காடுகளின் பரப்பை அதிகப்படுத்துவதன் மூலம் மண் வளத்தைப் பாதுகாக்க முடியும் என்றார்.

கூட்டத்தில் வனவர் பாலசுப்ரமணியன், வனக்காப்பாளர் ராஜேந்திரன், விஆர்என் தொண்டு நிறுவன செயலர் பாலகிருஷ்ணன், வனத்துறை பணியாளர்கள் செல்வராஜ், ஜெய்கிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்றனர்.

முன்னதாக ஊராட்சி மன்றத் தலைவர் சுப்ரவேல் வரவேற்றார். துணைத் தலைவர் முத்துக்குமார் நன்றி கூறினார்.

## தருமபுரிக்கு ஆயிரம் டன் சன்னரக நெல்

நீடாமங்கலத்திலிருந்து ஆயிரம் டன் சன்னரக நெல் அரவைக்காக தருமபுரிக்கு வியாழக்கிழமை அனுப்பி வைக்கப்பட்டது.

பாமணி மத்திய சேமிப்புக்கிடங்கு, திறந்தவெளி சேமிப்பு மையங்களிலிருந்து 75 லாரிகளில் ஆயிரம் டன் சன்னரக நெல் நீடாமங்கலம் ரயில் நிலையத்துக்கு கொண்டுவரப்பட்டன.

இந்த நெல் மூட்டைகள் நுகர்பொருள் வாணிபக்கழக அலுவலர்கள் முன்னிலையில் சரக்கு ரயிலில் அரவைக்காக தருமபுரிக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

## 23இல் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

கன்னியாகுமரி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வியாழக்கிழமை (ஜூன் 23) நடைபெறுகிறது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் சஜ்ஜன்சிங் ரா.சவாண் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

மாவட்ட விவசாயிகளுக்கு, ஜூன் மாதத்துக்கான கோரிக்கை தினக் கூட்டம் 23 ஆம் தேதி முற்பகல் 11 மணிக்கு மாவட்ட ஆட்சியரக நாஞ்சில் கூட்டரங்கில் நடைபெறுகிறது.

ஆட்சியர் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் விவசாயிகளிடமிருந்து கடந்த மாத கோரிக்கை தினத்தில் பெறப்பட்ட மனுக்களுக்கான பதில்கள் வழங்கப்படும். மேலும் விவசாயிகளின் விவசாயம் தொடர்பான கோரிக்கைகளும் ஆட்சியரால் நேரில் பெறப்படும்.

இக்கூட்டத்தில் விவசாயிகள் கலந்துகொண்டு தங்கள் கோரிக்கைகள் குறித்து தெரிவிக்கலாம் என செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மழை நீடிப்பு: அணைகளில் வேகமாக உயரும் நீர்மட்டம்: திற்பரப்பு அருவியில் குளிக்க தொடர்ந்து தடை

குமரி மாவட்டத்தில் தொடர் மழை காரணமாக திற்பரப்பு அருவியில் 2ஆவது நாளாக வியாழக்கிழமையும் குளிப்பதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது.

தென்மேற்குப் பருவமழை தொடங்கியுள்ள நிலையில், கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த இருநாள்களாக அணைப் பகுதிகள் மற்றும் மலையோரப் பகுதிகள் உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளிலும் மழை இடைவிடாது பெய்து வருகிறது.

தொடர்மழை காரணமாக அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து வருகிறது. குறிப்பாக, பேச்சிப்பாறை அணைக்கு விநாடிக்கு 2400 கனஅடி நீர்வரத்து இருந்தது.

அணைகளில் நீர்மட்டம்: பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் 35.25 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 2415 கன அடி நீர்வரத்து இருந்தது. பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் 67 அடியாகவும், அணைக்கு விநாடிக்கு 1280 கன அடி நீர்வரத்தும் இருந்தது.

சிற்றாறு-1 அணையின் நீர்மட்டம் 10.63 அடியாகவும், சிற்றாறு- 2 அணையின் நீர்மட்டம் 10.73 அடியாகவும் இருந்தது. இந்த அணைகளுக்கு முறையே விநாடிக்கு 309 மற்றும் 458 கன அடி நீர்வரத்து இருந்தது. பொய்கை அணையின் நீர்மட்டம் 17.80 அடியாகவும், மாம்பழத்துறையாறு அணை நீர்மட்டம் 18 அடியாகவும் இருந்தது.

அதிகபட்சமாக சிற்றாறு-1இல் 67.2 மி.மீ. மழையும், சிற்றாறு-2இல் 63 மி.மீ. மழையும், பாலமோரில் 47.4. மீ.மீ. மழையும், புத்தன் அணையில் 40 மி.மீ. மழையும் பதிவாகியிருந்தது.

மழையால் ஆறுகளில் தொடர்ந்து வெள்ளம் அதிகரித்த வண்ணம் உள்ளது. கோதையாறு, பரளியாறு, தாமிரவருணியாறு, பழையாறு உள்ளிட்ட ஆறுகளில் வெள்ளம் பாய்ந்தோடுகிறது.

குழித்துறையாற்றிலும், கோதையாற்றிலும் பல இடங்களில் தரைமட்ட பாலங்கள் சேதமடைந்தன. இதனால் மலையோரக் கிராம மக்கள் பெரும் அவதிக்கு

உள்ளானார்கள். மாணவ-மாணவிகள் பள்ளிகளுக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

12 வீடுகள் சேதம்: கோதநல்லூர், முத்தலக்குறிச்சி, அயக்கோடு, சின்னத்துறை உள்பட பல்வேறு இடங்களில் 12-க்கும் மேற்பட்ட வீடுகள் இடிந்து விழுந்தன. சாலையோரம் நின்ற பழைமையான மரங்களும் முறிந்தன. இதனால் மின் கம்பங்கள் சேதமடைந்தன. இவற்றை பொதுப்பணித் துறையினரும், மின்வாரிய அதிகாரிகளும் சீரமைத்து வருகின்றனர்.

திற்பரப்பு அருவியில் குளிக்கத் தடை: தொடர்மழை காரணமாக திற்பரப்பு அருவியில் தொடர்ந்து அதிகளவில் தண்ணீர் கொட்டுவதால் 2ஆவது நாளாக வியாழக்கிழமையும் சுற்றுலாப் பயணிகள் குளிப்பதற்கு தடை விதிக்கப்பட்டது.

தொழில்கள் பாதிப்பு: மாவட்டம் முழுவதும் பெய்து வரும் தொடர் மழையால் ரப்பர் பால் வடிப்பு தொழில் செய்ய முடியாமல் பாதிக்கப்பட்டுள்ளது. செண்பகராமன்புதூர், ஆரல்வாய்மொழி சுற்றுவட்டாரப் பகுதிகளில் செங்கல் உற்பத்தி முடங்கிப் போயுள்ளது. உப்பளத் தொழிலும் பாதிக்கப்பட்டுள்ளது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**நாவல் மருத்துவம்**

நாவல் பழம் மட்டுமின்றி பட்டை, விதை, இலை, வேர் ஆகிய அனைத்துமே மருத்துவ குணம் கொண்டது. இவ்வாறு ஒரு தாவரத்தின் அனைத்துப் பகுதிகளுமே மருத்துவக் குணம் கொண்டுள்ளதை இயற்கை மருத்துவத்தில் 'சமூலம்' என்பர். பழமும், பழத்தை காய வைத்து அரைத்த பொடியும் சர்க்கரை நோய்க்கு பரிந்துரை செய்யப்படுகிறது. பெண்களுக்கு ஏற்படும் அதிகப்படியான ரத்தப்போக்கினை நாவல் பழங்கள் கட்டுப்படுத்துகின்றன. நாவல் பழத்தில் கால்சியச் சத்தும், இரும்பு சத்தும் அதிகம் உள்ளதால் ஆஸ்டியோபோரோசிஸ் மற்றும் ரத்த சோகைக்கு பரிந்துரை செய்யப்படுகிறது. உடல் சூட்டினை குறைக்கும் இயல்பு நாவல் பழத்துக்கு உள்ளது.

## 5 ஆண்டுகளில் 3.24 லட்சம் மரக்கன்றுகள் வளர்ப்பு

ஈரோடு: "கடந்த ஐந்து ஆண்டுகளில், 41 கிராமங்களில், 3.24 லட்சம் மரக்கன்றுகள், தனியார் நிலங்களில் வளர்க்கப்பட்டுள்ளது," என, ஈரோடு மாவட்ட வன அலுவலர் நாகராஜன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும், கூறியதாவது: வன வளங்களை அதிகரிக்கவும், பசுமை தரும் மரங்களை அதிகரிக்க செய்யவும், வனத்துறை மூலம், தனியார் நிலங்களில் மரம் வளர்ப்பு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. கடந்த, 2011ல் துவங்கப்பட்ட இத்திட்டம், ஈரோடு மாவட்டத்தில் ஈரோடு மற்றும் கோபி மாவட்ட வனப்பகுதியில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் துவங்கியபோது, 5.50 லட்சம் ரூபாயை அரசு ஒதுக்கியது. தற்போது, மேலும், 5.50 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. புலிகள் சரணாலயத்துக்கு உட்பட்ட சத்தியமங்கலம், ஆசனூர் ஆகிய வனக்கோட்டங்களில், இத்திட்டம் செயல்படுத்தப்படுவதில்லை. தனியார் நிலங்களில், ஒரு நபருக்கு அதிகபட்சமாக, 200 மரக்கன்று வழங்கப்படும். மலைப்பகுதியில் மலைவேம்பு, தேக்கு மரக்கன்றும், மலையின் கீழ் பகுதியில் தேக்கு, சில்வர் ஓக் நடப்படும். நடப்பாண்டில் ஆறு கிராமங்களில், 85 ஆயிரம் கன்றுகள் நடவு செய்ய, விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. கோபி மாவட்ட வனப்பகுதியில், 2 லட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. கடந்த, 2011 முதல் இதுவரை, 41 கிராமங்களில், 3.24 லட்சம் மரக்கன்றுகள், 550 விவசாயிகள் மூலம் நடப்பட்டுள்ளது. மலைவேம்பு கன்றுகளை விரும்பி வளர்க்கின்றனர். இவை மூன்றாண்டுகளில் பெரிதாகிவிடும். இவற்றை சிறிய நிலையில், பேப்பர் மில் உட்பட பல பயன்பாட்டுக்கும், பெரிய அளவில் வளர்ந்தால், பிளைவுட் தயாரிக்கும் நிறுவனங்களுக்கும் வாங்கி செல்கின்றனர். குறைந்த நீர் தேவை என்பதால், இவற்றை விவசாயிகள் விரும்பி வளர்க்கின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

## நேந்திர வாழை விலையில் ஏற்றம்

பந்தலுார்: பந்தலுார் பகுதியில் நேந்திர வாழை விளைச்சலை விவசாயிகள் நம்பி உள்ளனர்.

பந்தலுார், கூடலுார் பகுதிகளில் நேந்திர வாழை விவசாயத்தில், பல இளைஞர்கள் ஈடுபட்டுள்ளனர். வன விலங்கு தொல்லைகளுக்கு மத்தியில்,சில இடங்களில் நேந்திர வாழை விளைச்சல் அதிகரித்துள்ளது.

தற்போது, கிலோ ஒன்றுக்கு, 43 ரூபாய் வரை விலையாக கிடைக்கிறது. நேந்திர வாழை விவசாயி வர்கீஸ் கூறுகையில்,“ நேந்திர வாழைக்கான விலையில், இதே விலை தொடர்ந்தால் நல்ல லாபம் கிடைக்கும். தற்போது பலத்த காற்றுடன் மழை பெய்வதால், வாழை மரங்கள் சாயாமல் பாதுகாக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது,” என்றார்.

## வேளாண் விழிப்புணர்வு கூட்டம்

கோத்தகிரி: கோத்தகிரி கக்குளா கிராமத்தில், தோட்டக்கலை துறை சார்பில், இயற்கை வேளாண்மை விழிப்புணர்வு கூட்டம் நடந்தது.

கக்குளா கிராம பிரமுகர் பசவராஜ் தலைமை வகித்தார். கோத்தகிரி தோட்டக்கலை உதவி இயக்குனர் சித்ரபானு, இயற்கை வேளாண்மை திட்டம் குறித்து விளக்கம் அளித்தார்.

ஊட்டி மண் ஆய்வு வேளாண்மை அலுவலர் ஹேமாவதி, மண் பரிசோதனை செய்வதன் அவசியம், இயற்கை முறையில் எவ்வாறு பாதுகாப்பது என்பது குறித்த விளக்கம் அளித்தார்.

கூட்டத்தில்,'அட்மா' திட்ட தொழில்நுட்ப மேலாளர் தீபா, உதவி தோட்டக்கலை அலுவலர் கோபாலன் உட்பட பலர் பங்கேற்றனர். விவசாயி ராமன் நன்றி கூறினார்.

## வரத்து குறைவால் காய்கறிகளின் விலை... உயர்ந்தது! இரண்டே மாதத்தில் இரு மடங்கானது

ஆண்டிபட்டி: ஆண்டிபட்டி மார்க்கெட்டில் வரத்து குறைவு, தேவை அதிகரிப்பால் காய்கறிகள் விலை உச்சத்திற்கு செல்கிறது. கடந்த இரண்டு மாதத்தில் விலை இரு மடங்கானது. இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் அதன் பயன்பாட்டை குறைத்து வருகின்றனர்.

ஆண்டிபட்டி அருகே அம்மச்சியாபுரம், குன்னுார், அரப்படித்தேவன்பட்டி, வெள்ளையத்தேவன்பட்டி, மூணாண்டிபட்டி, தர்மத்துப்பட்டி, புள்ளிமான்கோம்பை, பாலக்கோம்பை, அழகாபுரி, தெப்பம்பட்டி உட்பட பல கிராமங்களில் காய்கறி சாகுபடி உள்ளது.
கடந்த சில மாதங்களாக தொடரும் வறட்சியால் இறவை பாசன கிணறுகளில் நீர் சுரப்பு குறைந்து விட்டது.
ஆற்றில் நீர் வரத்து இல்லாததால் ஆற்றை ஒட்டி உள்ள கிராமப்பகுதிகளிலும் குறைந்த அளவே விவசாயம் நடந்து வருகிறது. விவசாய பரப்பு குறைந்து போனதால் விளைச்சலும் குறைந்துள்ளது. தற்போது முகூர்த்த சீசன் நடந்து வருவதால், காய்கறிகளுக்கான தேவைகள் பல மடங்கு அதிகரித்துள்ளது.
இதனால் கடந்த இரண்டு மாதத்தில் விலை இரு மடங்காக உயர்ந்தது.விஷேச நிகழ்ச்சிகளுக்கு கூடுதல் விலை கொடுத்தாவது காய்கறிகள் வாங்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.
வியாபாரிகள் தெரிவித்ததாவது:

ஆண்டிபட்டி தாலுகாவில் 10 டன்னாக இருந்த கத்தரி வரத்து வறட்சியால் தற்போது 2 டன் அளவே உள்ளது. தக்காளி வரத்து 15 டன்னில் இருந்து 2 டன்னாகவும், வெங்காயம் வரத்து 20 டன்னில் இருந்து ஒரு டன் அளவுக்கும் குறைந்துள்ளது. தேனி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து விளையும் முட்டைகோஸ், முள்ளங்கி, பீன்ஸ், கொத்தமல்லி ஆகியவை தேனி, ஆண்டிபட்டி மட்டும் இன்றி மதுரை, திருச்சி, கும்பகோணம், தஞ்சாவூர், அறந்தாங்கி பகுதி மார்க்கெட்டிற்கு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. ஆண்டிபட்டியில் கிடைக்காத காய்கறிகளை வெளியூர்களில் இருந்து கூடுதல் விலை கொடுத்து வாங்கி வரவேண்டி உள்ளது.

மதுரை மார்க்கெட்டில் கடந்த சில நாட்களாக 12 கிலோ தக்காளி ரூ. 1,100, 30 கிலோ கத்தரிசிப்பம் ரூ. 850, காரட் கிலோ ரூ. 60, வெங்காயம் கிலோ ரூ. 60,

உருளைக்கிழங்கு கிலோ ரூ. 30, முருங்கை பீன்ஸ் கிலோ ரூ. 120, மல்லி கிலோ ரூ. 120 வரை விற்கப்படுகிறது.

மொத்த விலையில் கொள்முதல் செய்து சில்லரை விலையில் விற்பனை செய்யும்போது, விலை இன்னும் அதிகமாகி விடுகிறது. இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் காய்கறி பயன்பாட்டை குறைத்துக் கொண்டுள்ளனர், என்றனர்.--

## பெரியாறு அணை நீர்பிடிப்பில் மழை - முதல் போக நெல் சாகுபடிக்கு நீர்திறக்க வாய்ப்பு

கூடலுர்: பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதியில் மழையால் நீர்வரத்து துவங்கியுள்ளதால், அணை நீர்மட்டம் உயர்ந்து விரைவில் கம்பம் பள்ளத்தாக்கு முதல்போக நெல் சாகுபடிக்கு நீர் திறக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

கேரளாவில் கொட்டித்தீர்க்கும் தென்மேற்கு பருவமழையால் பெரியாறு அணைக்கு நீர்பிடிப்பு பகுதியில் மழை பெய்து நீர்வரத்து துவங்கி, நேற்று காலை நிலவரப்படி வினாடிக்கு 443 கன அடியாக இருந்தது.

இதனால் அணையின் நீர்மட்டம் சற்று உயர்ந்து 110.80 அடியாக உள்ளது. தமிழகப்பகுதிக்கு 75 கன அடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது.

நீர் இருப்பு 1038 மில்லியன் கன அடியாகும். பெரியாறில் 39 மி.மீ., தேக்கடியில் 40 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. நீர்பிடிப்பு பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், அணைக்கு நீர்வரத்து அதிகரித்து நீர்மட்டம் உயரும் வாய்ப்புள்ளது.

நீர்திறக்க வாய்ப்பு

பருவமழை தீவிரமடைந்து தொடர்ந்து மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ள நிலையில், பெரியாறு அணை நீர்மட்டம் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால் விரைவில் நீர்மட்டம் 112 அடியைக் கடந்து, கம்பம் பள்ளத்தாக்கு முதல் போக நெல் விவசாயத்திற்காக தண்ணீர் திறக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக நாற்றுகள் வளர்ப்பிற்காக நாற்றாங்காலை சீரமைத்து வைக்கும் பணியில் விவசாயிகள் மும்மரமாகியுள்ளனர்.

* வைகை அணை நீர்மட்டம் 29.86 (71) அடியாக இருந்தது. நீர்வரத்து இல்லை. நீர்திறப்பு 60 கன அடியாக உள்ளது. நீர் இருப்பு 362 மில்லியன் கன அடியாகும்.

* சோத்துப்பாறை அணையின் நீர்மட்டம் 82.95 (126) அடியாக இருந்தது. நீர்வரத்து இல்லை. நீர்திறப்பு 3 கன அடி. நீர் இருப்பு 41.90 மில்லியன் கன அடியாகும்.

* மஞ்சளாறு அணையின் நீர்மட்டம் 35.60 (57) அடியாகும். நீர்வரத்து மற்றும் நீர்திறப்பு இல்லை. நீர் இருப்பு 132.45 மில்லியன் கன அடியாகும்.

300டன் நெல் விதைகள் தயார்

கம்பம் பள்ளத்தாக்கில் முதல்போக நெல் சாகுபடிக்காக வேளாண் துறை சார்பில் கோ- 51, ஏ.டி.டி.-36 ஆகிய சான்று விதை மற்றும் ஆதார விதைகள் 300 டன் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

சான்று பெற்ற விதை கிலோ ரூ.32க்கும், ஆதார விதை கிலோ ரூ.34க்கு விற்பனை செய்யப்படுகிறது. கிலோவிற்கு மானியம் ரூ.10 வழங்கப்படும்.

இந்த ஆண்டு விவசாயிகளுக்கு விதைநெல் தட்டுப்பாடு ஏற்பட கூடாது என்பதற்காக அனைத்து வேளாண் டெப்போக்களிலும் கூடுதலாக இருமடங்கு விதை இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் தேசிய உணவு பாதுகாப்பு திட்டம், மக்காசோளம், பயறு விதை திட்டங்கள் மூலம் விவசாயிகளுக்கு தேவையான விதைகள் மற்றும் உயிர் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளதாக, தேனி வேளாண்மை இணை இயக்குனர்(பொறுப்பு) சங்கரன் தெரிவித்தார்.

## விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்

ராமநாதபுரம்: ஜூன் மாதத்திற்கான விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் வரும் 17ம் தேதி காலை 11.30 மணிக்கு கலெக்டர் அலுவலகத்தில் உள்ள ஊராட்சி மன்ற கூட்ட அரங்கில் நடக்கிறது. இந்த கூட்டத்தில் அனைத்து விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் பங்கேற்று விவசாயம் தொடர்பான குறைகள், கோரிக்கைகளை தெரிவிக்கலாம். விவசாயம் தொடர்பான கோரிக்கைகள் மட்டுமே விவாதிக்கப்படும் என, கலெக்டர் நடராஜன் கூறினார்.

## ரூ.4 லட்சத்துக்கு பருத்தி வர்த்தகம்

நாமக்கல்: நாமக்கல் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளான பரமத்தி, திருச்செங்கோடு, ராசிபுரம், நாமகிரிப்பேட்டை, சேந்தமங்கலம், புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பகுதிகளில், 2,500 ஹெக்டேர் பரப்பளவில் பருத்தி சாகுபடி செய்யப்படுகிறது. அறுவடை செய்யப்படும் பருத்தி ரகங்கள், நாமக்கல் என்.சி.எம்.எஸ்., குடோனுக்கு வாரம்தோறும் வியாழக்கிழமை நடக்கும் ஏலத்துக்கு கொண்டு வரப்படுகிறது. நேற்று நடந்த ஏலத்தில், ஆர்.சி.ஹெச்., குறைந்தபட்சம், 4,860 ரூபாய், அதிகபட்சம், 5,489 ரூபாய், டி.சி.ஹெச்., குறைந்தபட்சம், 5,599 ரூபாய், அதிகபட்சம், 6,355 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தம், 200 மூட்டை பருத்தி, நான்கு லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

## வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கு

நாமக்கல்: நாமக்கல் பி.ஜி.பி., வேளாண்மை அறிவியல் கல்லூரியில் தென்னிந்திய வணிகம் மற்றும் தொழிற்சபை, சென்னை எஸ்.ஐ.சி.சி.ஐ., ஆகியவை இணைந்து, ஆறாவது முறையாக நடத்தும் வேளாண்மை கண்காட்சி மற்றும் கருத்தரங்குகள் நாளை (ஜூன் 11) மற்றும் நாளை மறுநாள் (ஜூன் 12) நடக்கிறது. இதில், அனைவருக்கும் அனுமதி இலவசம். நிகழ்ச்சியானது பி.ஜி.பி., நிறுவனங்கள். தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், ஸ்பிக், கொரமண்டல் போன்ற நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் பங்களிப்புடன் நடக்கிறது. இதில், வேளாண் இடுபொருட்கள் மற்றும் விளைபொருட்களுக்கென கண்காட்சி மற்றும் வேளாண்துறையை சார்ந்த நவீன தொழில்நுட்பங்கள், பயிர் ரகங்கள், இயற்கை முறைகள், வேளாண் சார்ந்த செய்திகள் இடம் பெற உள்ளன. கருத்தரங்கை மின்சாரத்துறை அமைச்சர் தங்கமணி, சமூகநலத்துறை அமைச்சர் சரோஜா ஆகியோர் துவக்கி வைக்கின்றனர். நாமக்கல் மாவட்ட கலெக்டர் தட்சிணாமூர்த்தி பங்கேற்கிறார். இதற்கான ஏற்பாடுகளை பி.ஜி.பி., குழுமங்களின் தலைவரும், தென்னிந்திய தொழில் மற்றும் வர்த்தக சபையின் தலைவருமான டாக்டர் பழநி. ஜி.பெரியசாமி செய்து வருகிறார்.

இன்றைய வேளாண் செய்திகள்

## திருச்சியில் குவியும் பலாப்பழங்கள் மணக்க மணக்க, இனிக்க இனிக்க

திருச்சி,: திருச்சி காந்தி மார்க்கெட்டுக்கு புதுக்கோட்டை மாவட்டம் வடகாடு, ஆலங்குடி, மாங்காடு, சேலம், கடலூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து பலாப்பழங்கள் லாரி, லாரியாக வரத் தொடங்கியுள்ளது. இதையடுத்து திருச்சி மற்றும் சுற்று வட்டாரங்களில் இருந்து சிறு வியாபாரிகள் மட்டுமல்லாமல் பொதுமக்களும் காந்திமார்க்கெட்டிற்கு வந்து போட்டி, போட்டு பலாப் பழங்களை வாங்கி செல்கின்றனர். கடந்த வருடம் ரூ.200முதல் 300வரை விற்று வந்த பலாப்பழம் இந்த வருடம் ரூ.50 முதல் 200 வரை விற்பனையாகிறது.

இது குறித்து திருச்சி காந்திமார்க்கெட் மொத்த வியாபாரி பதுருல்லா கூறுகையில், பலாப்பழ விளைச்சலில் கடலூர் மாவட்டம் பண்ருட்டிதான் முதலிடம் வகிக்கிறது. இங்கு விளையும் பலாப் பழங்கள் அதிக சுவை கொண்டதாகும். இந்த ஆண்டு பண்ருட்டியில் பலாப்பழம் விளைச்சல் குறைவாக இருப்பதால் காந்திமார்க்கெட்டுக்கு புதுக்கோட்டை மாவட்டத்தில் இருந்து பலாப்பழங்கள் கொள்முதல் செய்யப்படுகிறது. இங்கிருந்து வெளியூர்களுக்கு இந்த பலாப் பழங்களை சிறு வியாபாரிகள் வாங்கி செல்கின்றனர். இங்கு வாங்கி செல்லும் பலாப்பழங் களை ஒரு பழத்துக்கு ஒரு கிலோ ரூ.40 வரை லாபம் வைத்து சிறு வியாபாரிகள் விற்பனை செய்யப்படுகிறது. அடுத்த மாதம் வரை பலாப்பழ சீசன் இருக்கும். இதில் அவ்வப்போது விலை ஏற்றம் இருக்கும் என்றார். ரூ.50 முதல் ரூ.200 வரை விற்பனை

## அதிக மகசூல் பெற குறுவை சாகுபடி தொகுப்பு திட்டத்தை பயன்படுத்துங்கள் விவசாயிகளுக்கு யோசனை

ஒரத்தநாடு, : குறுவை சாகுபடி தொகுப்பு திட்டத்தை விவசாயிகள் நல்ல முறையில் பயன்படுத்தி அதிக மகசூல் எடுக்க வேண்டும் என வேளாண் அதிகாரி கேட்டுக்கொண்டுள்ளார். இதுகுறித்து ஒரத்தநாடு வேளாண் உதவி இயக்குநர் பாலசரஸ்வதி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: முதல்வரின் குறுவை சாகுபடி செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு குறுவை சாகுபடி தொகுப்பு திட்டம் அறிவித்துள்ளனர். இத்திட்டத்தின் கீழ் 4 வகை இனங்கள் உள்ளன. இயந்திர நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ.4,000 அவர்களது வங்கி கணக்கில் ஏற்றப்படும். இவ்வினத்தின் கீழ் ஒரத்தநாடு வட்டாரத்திற்கு 5,475 ஏக்கர் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எனவே நிலையான நீர் ஆதாரமுள்ள விவசாயிகள் உடன் பாய் நாற்றாங்கால் முறையில் நாற்று விட்டு இயந்திரம் மூலம் நடவு செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறது. விவசாயிகள் விண்ணப்பம், சிட்டா அடங்கல், வங்கி கணக்கு புத்தக ஒளி நகல், ஆதார் அட்டை, பாய் நாற்றாங்காலில் நின்று ஒரு புகைப்படம், நடவு செய்யும்போது நடவு இயந்திரத்தோடு நின்று ஒரு புகைப்படம் ஆகிய ஆவணங்களை எடுத்து அந்தந்த பகுதி வேளாண் உதவி அலுவலர்களிடம் அளிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது. பாய் நாற்றங்கால் முறையில் நாற்றுவிட்டு இயந்திர நடவு மேற்கொள்ள ஒரத்தநாடு வட்டாரத்தை சார்ந்த விவசாயிகளை அல்லது நிறுவனங்களை அணுகவும்.

மேலும் விவசாயிகள் தங்களுக்கு தெரிந்த நிறுவனங்களின் மூலமும் நடவு செய்து கொள்ளலாம். 10,000 கிலோ நெல் நுண்ணூட்டம் ஒரத்தநாடு வட்டத்திற்கு வரப்பெற்றுள்ளது. ஒரு ஏக்கருக்கு 5 கிலோ முழு மானியத்தில் வழங்கப்படும். ஒரு ஏக்கருக்கு 10 கிலோ சிங்க் சல்பேட் முழு மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படும். நிலையான நீராதாரம் இல்லாத விவசாயிகள் நெல் சாகுபடி செய்ய முடியவில்லையெனில் உளுந்து சாகுபடி மேற்கொள்ள 1,375 ஏக்கர் இலக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 1ம் தேதிக்கு பிறகு உளுந்து விதைப்பு மேற்கொண்டுள்ள விவசாயிகளுக்கு 1 ஏக்கருக்கு ரூ.1,400 மானியம் வழங்கப்படும். 3 அங்குலம் விட்டமுள்ள குழாய்கள் குறுவை சாகுபடி செய்கின்ற நிலையான நீர் ஆதாரம் உள்ள விவசாயிகளுக்கு மட்டும் வழங்கப்படும். 25 யூனிட்டுகள் இலக்கு வழங்கப்பட்டுள்ளது. கடந்த வருடங்களில் குழாய்கள் பெற்றவர்கள் இந்த வருடம் வாங்க தகுதி கிடையாது.

குறுவை சாகுபடி தொகுப்பு திட்டத்தை குறுவை விவாயிகள் நல்ல முறையில் பயன்படுத்தி அதிக மகசூல் எடுக்க வேண்டும். மேலும் விவசாயிகள் பயிர் விளைச்சல் போட்டியில் கலந்துகொள்ள வேண்டும் இவ்வாறு அவர் அதில் தெரிவித்துள்ளார்.

## உளுந்து பயிரில் பூச்சி, நோய் தாக்குதலை கட்டுப்படுத்தும் வழிமுறைகள்

சேதுபாவாசத்திரம் : உளுந்து பயிரில் பூச்சி மற்றும் நோய் தாக்குதலை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் பற்றி வேளாண் அதிகாரி விளக்கமளித்துள்ளார். இதுகுறித்து சேதுபாவாசத்திர வட்டார வேளாண் உதவி இயக்குனர் (பொ) சாந்தி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: உளுந்து பயிரை தாக்கும் பூச்சிகளில் தண்டு ஈ, அசுவினி, தத்துபூச்சி, வெள்ளை ஈ ஆகியன மிக முக்கிய பூச்சிகளாகும். தண்டு ஈ தாக்குதலால் செடிகள் முற்றிலும் காய்ந்துவிடும்.

இதைக் கட்டுப்படுத்த மானோகுரோட்டோபாஸ் மருந்தினை விதைத்த 7ம் நாள் 1 லிட்டர் தண்ணீருக்கு 2 மிலி என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும். வளர்ச்சி பருவத்தின் போது தாக்கும் அசுவினி, தத்துப்பூச்சி, வெள்ளை ஈ ஆகியவற்றை கட்டுப்படுத்திட மீத்தைல் டெமட்டான் (அல்லது) டைமீத்தோயேட் (அல்லது) பாஸ்போமிடான் இதில் ஏதாவது ஒரு மருந்தை 2 மிலியை 1 லி. தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். வானிலையில் அசுவினியின் தாக்குதல் அதிகமாக தென்பட்டால் இதற்கு டைக்குளோர்வாஸ் 2 மிலி மருந்தினை 1 லி. தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

நோய்களை பொருத்தமட்டில் மஞ்சள் தேமல் நோய், வாடல் நோய், வேர் அழுகல் நோய், சாம்பல் நோய் ஆகியன முக்கியமானவையாகும். மஞ்சள் தேமல் நோய் தென்பட்டால் உடனே பயிரை பிடுங்கி அப்புறப்படுத்துவதே சிறந்த

கட்டுப்பாடாகும். வாடல் நோய் மற்றும் வேர் அழுகல் நோய் தாக்குண்ட செடிகளை பிடுங்கி அகற்றி அந்த இடத்தில் பாவிஸ்டின் 10 கிராம் மருந்தை 1 லி. தண்ணீரில் கரைத்து செடி பிடுங்கிய இடத்தில் கரைசலை ஊற்ற வேண்டும். இதனால் நோய் பரவாமல் தடுக்கலாம். சாம்பல் நோய் தென்படும் இடங்களில் 1 லி. தண்ணீரில் நனையும் கந்தகத்தூல் 10 கிராம் மருந்தை கரைத்து தெளித்து கட்டுப்படுத்தலாம். இவ்வாறு அவர் அதில் கூறியுள்ளார்.

## பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 2 அடி உயர்ந்தது சிற்றார்-1ல் 67.2 மி.மீ மழை பதிவு

நாகர்கோவில், : குமரி மாவட்டம் முழுவதும் கன மழை நீடித்து வரும் நிலையில் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகள் நீர்மட்டம் தலா 2 அடி உயர்ந்துள்ளது. குமரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக சாரல் மழை பெய்து வருகிறது. தென் மேற்கு பருவமழையும் தொடங்கியுள்ளதாக வானிலை மையம் அறிவித்துள்ள நிலையில், இந்த மழை வரும் நாட்களிலும் நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மாவட்டத்தில் மலையோர பகுதிகள், அணையின் நீர்பிடிப்பு பகுதிகளிலும் கனத்த மழை காணப்படுகிறது. தொடர் மழை காரணமாக அணைகளுக்கு நீர்வரத்து கணிசமாக அதிகரித்துள்ளது.

நேற்று காலையும் வானம் மேகமூட்டத்துடன் காணப்படுவதும், மழை பொழிவதுமாக இருந்தது. வழக்கமாக ஜூன் 1ம் தேதி திறக்கப்பட வேண்டிய அணைகள் தொடர்ந்து மூடப்பட்டுள்ளன. இதனால் அணைகள் நீர்மட்டம் மளமளவென்று உயர்ந்து வருகிறது. நேற்று காலை நிலவரப்படி பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் 35.25 அடியாக இருந்தது.அணைக்கு வினாடிக்கு 2415 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. பெருஞ்சாணி நீர்மட்டம் 67.50 அடியாக இருந்தது. அணைக்கு 1780 கன அடி தண்ணீர் வரத்து காணப்பட்டது. சிற்றார்-1ல் 10.63 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு 309 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. சிற்றார்-2ல் 10.73 அடியாக நீர்மட்டம் உள்ளது. அணைக்கு 458 கன அடி தண்ணீர் வரத்து காணப்பட்டது. பொய்கையில் 17.80 அடியாக நீர்மட்டம் உள்ளது.

மாம்பழத்துறையாறு அணையின் நீர்மட்டம் 52.82 அடியாக உள்ளது. பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணையின் நீர்மட்டங்கள் ஒரே நாளில் தலா 2 அடி உயர்ந்துள்ளது. தொடர் மழை காரணமாக மாவட்டத்தில் 15க்கும் மேற்பட்ட வீடுகள் இடிந்து விழுந்துள்ளன. மாவட்டத்தில் ஆங்காங்கே மரக்கிளைகள் முறிந்து விழுந்து வருவதால் மின்சாரம் தடைபடுவதுடன் வாகனங்கள், வீடுகள் சேதம் அடைந்து வருகின்றன. தொடர் மழையால் குழித்துறை தாமிரபரணி, பழையாறு, வள்ளியாறு ஆகியவற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. மாவட்டத்தில் நேற்று காலை வரை அதிகபட்சமாக சிற்றார்-1ல் 67.2 மி.மீ மழை பதிவாகி இருந்தது.

**நத்தத்தில் கடலை விற்பனை அமோகம்**

நத்தம், : நத்தத்தில் கடலை விற்பனை அமோகமாக உள்ளது. வரத்து குறைவால், படி ரூ.40 வரை விலை போகிறது.

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் பகுதியில் கத்தரி, மிளகாய் உள்ளிட்ட பல்வேறு காய்கறிகளுடன், நிலக்கடலையும் சாகுபடி செய்யப்படுகிறது. முங்கில்பட்டி, மலையூர், லிங்காவடி உள்ளிட்ட கிராம பகுதிகளில் இறவை சாகுபடியாகவும், மானாவாரியாகவும் நிலக்கடலை பயிரிடப்படுகிறது. நிலத்தின் தன்மைக்கேற்ப மணிலா கடலை, கம்பெனி கடலை, நாட்டுக் கடலை உள்ளிட்ட வகைகளில் இப்பகுதி விவசாயிகள் பயிரிடுகின்றனர்.

நிலக்கடலையில் மருத்துவ குணங்கள் ஏராளமாக உள்ளன. உடலுக்கு தேவையான மாங்கனீசு சத்து அதிகமாக உள்ளது. ரெஸ்வரெட்ரால் என்ற சத்து இதய வால்வுகளை பாதுகாக்கிறது. தாமிரம் துத்தநாக சத்தானது தீமை செய்யும் கொழுப்பை குறைக்கும் தன்மை கொண்டது. இதனால் தான் ஆண்டுமுழுவதும் நிலக்கடலையை சாகுபடி செய்து விற்பனை செய்கின்றனர். கடந்த ஆண்டு நிலக்கடலை படி ஒன்று ரூ.30க்கு விற்கப்பட்டது. ஆனால் இந்தாண்டு கடும் வறட்சி காரணமாக வரத்து குறைந்து, படி ஒன்று ரூ.35 முதல் 40 வரை விற்பனையாகிறது.

## இன்றைய வேளாண் செய்திகள்

### பன்னீர் திராட்சை சாகுபடி பரப்பளவு 50 ஏக்கர் அதிகரிப்பு

கோவை தொண்டாமுத்தூர் பகுதியில் பன்னீர் திராட்சை சாகுபடி பரப்பளவு 50 ஏக்கர் அதிகரித்துள்ளது.

பன்னீர் திராட்சை சாகுபடி

கோவை மேற்கு தொடர்ச்சி மலை அருகில் தொண்டாமுத்தூர் உள்ளது. விவசாயமே முக்கியத்தொழிலாக திகழும் இப்பகுதியில் பல்வேறு தோட்டப்பயிர்களும், காய்கறிகளும் பயிரிடப்படுகின்றன. இது தவிர இங்குள்ள மாதம்பட்டி, தீத்திபாளையம், காளம்பாளையம் கரடிமடை, மத்திபாளையம், ஓணாப்பாளையம், தேவ ராயபுரம், தொண்டாமுத்தூர் ஆகிய இடங்களில் பன்னீர்திராட்சை சாகுபடி செய்யப்படுகிறது.

சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு இந்த பகுதிகளில் 3,000 ஏக்கரில் திராட்சை சாகுபடி நடந்தது. ஆனால் கடந்த 2002-ம் ஆண்டு ஏற்பட்ட கடும் வறட்சிக்கு பின்பு மழை இல்லாததாலும், நிலத்தடி நீர்மட்டம் குறைந்ததாலும் திராட்சை விளைவிப்பதை விவசாயிகள் கைவிட்டனர். இதனால் திராட்சை விவசாயம் 700 ஏக்கராக மாறியது. இதுகுறித்து திராட்சை உற்பத்தியாளர்கள் கூறியதாவது:-

2 டன்னாக குறைந்தது

பாரம்பரியமான பன்னீர் திராட்சை கோவை பகுதியில் தொடர்ந்து சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. திராட்சை உற்பத்தியை பொறுத்தமட்டில் மழைநீர்

மற்றும் நிலத்தடிநீர் அதிகமாக தேவைப்படும். இந்த நிலையில் தற்போது தென்மேற்கு பருவமழை சீசன் தொடங்கி உள்ளது. இதனால் தற்போது திராட்சை தோட்டங்களில் கவாத்து பணிகள் நடந்து வருகிறது.

இன்னும் 3 மாதங்களில் திராட்சை அறுவடை சீசன் தொடங்கி விடும். தற்போது சீசன் இல்லாததால் மிகவும் குறைந்த அளவில் மகசூல் உள்ளது. இதனால் விளைவிக்கப்படும் இடத்தில் கிலோ ரூ.55-க்கு விற்பனையாகிறது. திராட்சைக்கு அதிகளவில் மழை பெய்தாலும் பிரச்சினை வந்துவிடும். மழை இல்லை என்றாலும் பிரச்சினைதான். அதிகளவில் மழை பெய்தால், திராட்சை கொடியில் உள்ள பூக்கள், பிஞ்சுகள் உதிர்ந்து விடும். இதனால் தொடர்ந்து திராட்சை சாகுபடியில் பின்னடைவு ஏற்படும்.

கேரளாவுக்கு செல்கிறது

திராட்சை பழங்கள் சீசன் காலத்தில் தினசரி 25 முதல் 30 டன் வரை அறுவடையாகும். தற்போது 2 டன்னாக குறைந்து விட்டது. விலை கட்டுப்படியானாலும் உற்பத்தி இல்லாததால் விவசாயிகளுக்கு எந்தவித பயனும் இல்லாத நிலை உள்ளது. திராட்சை சீசனை பொறுத்தவரை ஆகஸ்டு, செப்டம்பர் மற்றும் மார்ச், ஏப்ரல் மாதங்கள் ஆகும். ஆகவே இனி ஆகஸ்டு மாதத்தில் இருந்து சீசன் தொடங்கும்.

அப்போது திராட்சை குலைகள் அறுவடை செய்யப்படும். இங்கு உற்பத்தியாகும் திராட்சை 70 சதவீதம் விற்பனைக்காக கேரளாவுக்கு செல்கிறது. மற்ற திராட்சை பழ வகைகளை விட, பன்னீர் திராட்சை பழத்தில் மருத்துவ குணங்கள் அதிகம் உள்ளன. இதனை அறிந்தவர்கள் அதனை வாங்கி சாப்பிடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். அந்த வகையில் கேரளாவில் பன்னீர் திராட்சைக்கு நிலையான சந்தை வாய்ப்புகள் உள்ளன.

50 ஏக்கர் அதிகரிப்பு

மேலும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் காலநிலைக்கு ஏற்ப வெளிநாடுகளுக்கு ஏற் றுமதியாகும் தரமான புதிய ரக திராட்சைப் பயிரை கண்டுபிடித்து தர வேண்டும். தற்போது திராட்சை சாகுபடி செலவு அதிகமாக உள்ளது. குறிப்பாக ஒரு ஏக்கரில் திராட்சை பயிரிட ரூ.5 லட்சம் வரை செலவாகிறது. ஆனால் அரசுடைமை வங்கிகளில் ரூ.1 லட்சம் மட்டுமே கடனாக தரப்படுகிறது.

வங்கிகளில் குறைந்த வட்டியில் மானியத்துடன் ரூ.3 லட்சம் கடனாக தர வேண்டும். தற்போது தொண்டாமுத்தூர் பகுதியில் கூடுதலாக 50 ஏக்கர் அளவில் சாகுபடி பரப்பளவு அதிகரித்துள்ளது. இதனால் வருகிற சீசனில் மகசூல் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. மேலும் திராட்சைக்கு விலை கட்டுப்படியாகும்படி இருந்தால் எதிர்காலத்தில் கோவை பகுதியில் திராட்சை சாகுபடி அதிகரிக்கும். இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## முகூர்த்த தினத்தையொட்டி விலை உயர்வு: மல்லிகை பூ கிலோ ரூ.200–க்கு விற்பனை



ஈரோடு,

முகூர்த்த தினத்தையொட்டி மல்லிகை பூ விலை உயர்ந்து கிலோ ரூ.200–க்கு நேற்று விற்பனையானது.

மல்லிகை பூ

ஈரோடு பஸ் நிலையம் பகுதியில் 20–க்கும் மேற்பட்ட பூக்கடைகள் செயல்பட்டு வருகிறது. இந்த கடைகளுக்கு ஈரோடு மாவட்டத்தில் உள்ள அந்தியூர், சத்தியமங்கலம் போன்ற இடங்களில் இருந்தும் திண்டுக்கல், நாமக்கல், சேலம் போன்ற வெளி மாவட்டங்களில் இருந்தும் பூ விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. ஈரோடு மாநகர் பகுதியில் உள்ள சிறு வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் இங்கு வந்துதான் பூக்களை வாங்கிச்செல்கின்றனர்.

வெயில் மற்றும் மழை காலங்களில் மல்லிகை பூ அதிக அளவில் பூக்கும். பனி காலங்களில் மட்டும் சரியாக பூக்காது. தற்போது வெயிலும், சில நேரங்களில் மழை பெய்தும் வருவதால் மல்லிகை பூ வரத்து அதிக அளவில் உள்ளது. ஆனாலும் நேற்றும், நேற்று முன்தினமும் சுபமுகூர்த்த தினம் என்பதால் மல்லிகை பூ விலை உயர்ந்துள்ளது.

கடந்த வாரம் ஒரு கிலோ ரூ.80–க்கு விற்பனையான மல்லிகை பூ நேற்று ரூ.200–க்கு விற்பனை ஆனது. பூ விலை உயர்ந்தாலும் ஏராளமான பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் ஆர்வமுடன் வந்து பூக்களை வாங்கிச்சென்றனர். இதன் காரணமாக நேற்று பூக்கடையில் வழக்கத்தைவிட பொதுமக்கள் கூட்டம் அதிக அளவில் இருந்தது.

ரூ.200–க்கு விற்பனை

இதுகுறித்து ஈரோடு பஸ் நிலையம் அருகில் பூக்கடை வைத்திருக்கும் சாதிக்பாட்ஷா என்பவர் கூறியதாவது:–

நாமக்கல், அந்தியூர் ஆகிய பகுதிகளில் இருந்து மல்லிகை பூவும், சத்தியமங்கலத்தில் இருந்து சம்பங்கி பூவும், திண்டுக்கல்லில் இருந்து மருகும், சேலத்தில் இருந்து அரளி, சம்பங்கி, முல்லை போன்ற பூக்களும் ஈரோட்டுக்கு விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது.

கடந்த வாரம் ஒரு கிலோ மல்லிகை பூ ரூ.80–க்கு விற்பனையானது. ஆனால் கடந்த 2 நாட்களாக சுபமுகூர்த்த தினம் என்பதால் மல்லிகை பூ விலை சுமார் 3 மடங்கு

உயர்ந்து இன்று (நேற்று) ஒரு கிலோ ரூ.200–க்கு விற்பனையானது. மேலும் ரூ.80–க்கு விற்பனையான முல்லை பூவும் 2 மடங்கு விலை உயர்ந்து ரூ.160–க்கு விற்பனையானது. இவ்வாறு அவர் கூறினார்.

<u>கோழிக்கொண்டை</u>

ஈரோட்டில் நேற்று விற்பனையான மற்ற பூக்களின் விலை கிலோவில் வருமாறு:–

அரளிப்பூ ரூ.50–க்கும், கோழிக்கொண்டை பூ ரூ.140–க்கும், சம்பங்கி பூ ரூ.50–க்கும், சாதா ரோஸ் ரூ.120–க்கும், கேந்தி பூ ரூ.100–க்கும், சிவந்தி பூ ரூ.140–க்கும் விற்பனையானது. மேலும் மருகு ரூ.60–க்கு விற்பனையானது.

ஊட்டி ரோஸ், கனகாம்பரம் மற்றும் ஜாதிமல்லி போன்ற பூக்கள் தற்போது ஈரோட்டுக்கு வரத்து இல்லை.

## குமரி மாவட்டத்தில் மழை நீடிப்பு: அணைகளுக்கு 5 ஆயிரம் கன அடி தண்ணீர் வரத்து



குமரி மாவட்டத்தில் மழை நீடித்து வருகிறது. இதனால் அணைகளுக்கு 5 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது.

தொடர் மழை

குமரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. நாகர்கோவில் நகரப்பகுதிகளில் நேற்று காலையில் சிறிது நேரம் மழை பெய்தது. அதன் பிறகு மதியம் வரை மழை ஓய்ந்திருந்தது. இடையிடையே வெயில் முகமும் காணப்பட்டது. மதியம் சுமார் 1.15 மணி அளவில் மீண்டும் மழை பெய்யத் தொடங்கியது. அதன் பிறகு விட்டு, விட்டு மழை பெய்து கொண்டிருந்தது. இதேபோல் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்தது.

நேற்று காலை 8 மணி வரையிலான 24 மணி நேரத்தில் குமரி மாவட்டத்தில் பெய்த மழை அளவு விவரம் (மி.மீ.) வருமாறு:–

மழை அளவு

பேச்சிப்பாறை–39.6, பெருஞ்சாணி–41.6, சிற்றார் 1–67.2, சிற்றார் 2–63, பொய்கை–11, மாம்பழத்துறையாறு–33, முக்கடல்–18, நாகர்கோவில்– 8, பூதப்பாண்டி–17.1, சுருளோடு–30, கன்னிமார்–15.2, ஆரல்வாய்மொழி–11, பாலமோர்–47.4, மயிலாடி–36.4, கொட்டாரம்–46.8, நிலப்பாறை– 16.4, இரணியல்–13.6, ஆனைக்கிடங்கு–34, குளச்சல்–26.6, குருந்தங்கோடு–31.2, அடையாமடை–17, கோழிப்போர்விளை–14.7, முள்ளங்கினாவிளை–36, புத்தன் அணை–40.2, திற்பரப்பு–13.2 என்ற அளவில் மழை பதிவாகி இருந்தது.

குமரி மாவட்ட அணைகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் அணைகளுக்கு வரும் தண்ணீர் வரத்து அதிகரித்துக்கொண்டிருக்கிறது. நேற்றைய நிலவரப்படி பேச்சிப்பாறை அணைக்கு வினாடிக்கு 2415 கன அடி தண்ணீரும், பெருஞ்சாணி அணைக்கு 1780 கன அடி தண்ணீரும், சிற்றார் –1

அணைக்கு 309 கன அடி தண்ணீரும், சிற்றார் –2 அணைக்கு 458 கன அடி தண்ணீரும், பொய்கை அணைக்கு 2.32 கன அடி தண்ணீரும், மாம்பழத்துறையாறு அணைக்கு 18 கன அடி தண்ணீரும் வந்து கொண்டிருந்தது. அணைகளுக்கு மொத்தம் 4982 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணைகள் எதுவும் திறக்கப்படவில்லை.

நீர்மட்டம் உயர்வு

அணைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்திருப்பதின் காரணமாக அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. நேற்று முன்தினம் 33.60 அடியாக இருந்த பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் நேற்று 35.25 அடியாக உயர்ந்தது. 65.10 அடியாக இருந்த பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 2 அடி உயர்ந்து நேற்று 67 அடியாக அதிகரித்தது. 9.61 அடியாக இருந்த சிற்றார்–1 அணை நீர்மட்டம் 10.63 அடியாகவும், 9.71 அடியாக இருந்த சிற்றார்–2 அணை நீர்மட்டம் 10.73 அடியாகவும், பொய்கை அணையின் நீர்மட்டம் 17.80 அடியாகவும், மாம்பழத்துறையாறு அணை நீர்மட்டம் 52.82 அடியாகவும் உயர்ந்தன.

## கிருஷ்ணகிரி அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரிப்பு



நீர்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்வதன் எதிரொலியாக கிருஷ்ணகிரி அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. ஆனால் மதகுகள் சீரமைப்பு பணி காரணமாக அணைக்கு வரக்கூடிய தண்ணீர் அப்படியே திறந்து விடப்படுகிறது.

கிருஷ்ணகிரி அணை

கிருஷ்ணகிரி அருகே தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கிருஷ்ணகிரி அணை கட்டடப்பட்டுள்ளது. இந்த அணையில் உள்ள 8 மதகுகளை சீர் செய்யும் பணி நடந்து வருகிறது. இதற்காக ரூ.1 கோடியே 10 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மதகுகளை சீரமைப்பு செய்ய அணையின் மொத்த உயரமான 52 அடியில் இருந்து தண்ணீரை 36 அடிக்கு குறைக்க வேண்டும்.

இதனால் தென்பெண்ணை ஆற்றிலும், இணைப்பு ஏரிகளுக்கும் தண்ணீர் திறந்து விடப்பட்டது. அணைக்கு வினாடிக்கு 400 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டு

இருந்தது.

தண்ணீர் வரத்து அதிகரிப்பு

இந்த நிலையில் தற்போது கர்நாடக மாநிலத்தில் உள்ள நீர்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்வதால் கிருஷ்ணகிரி அணைக்கு வரக்கூடிய தண்ணீரின் அளவு அதிகரித்துள்ளது. கிருஷ்ணகிரி அணையின் உச்சபட்ச நீர்மட்டம் 52 அடியாகும். தற்போது அணையின் நீர்மட்டம் 30.20 அடியாகும். அணைக்கு வினாடிக்கு 820 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. ஆனால் மதகு சீரமைப்பு பணிகள் காரணமாக அணைக்கு வரக்கூடிய தண்ணீர் அப்படியே திறந்து விடப்படுகிறது.

இது குறித்து அதிகாரிகள் கூறியதாவது:-

அணையில் மதகுகள் சரி செய்யும் பணி நடந்து வருகிறது. இதனால் அணைக்கு வரக்கூடிய தண்ணீர் அப்படியே திறந்து விடப்படுகிறது. மதகுகள் சீரமைப்பு பணி இன்னும் 10 நாட்களில் நிறைவடையும். அதன் பிறகு அணையில் தண்ணீரை தேக்கி வைக்க முடிவு செய்துள்ளோம். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## தஞ்சையில் இருந்து காஞ்சீபுரத்துக்கு 1,200 டன் புழுங்கல் அரிசி சரக்கு ரெயிலில் அனுப்பப்பட்டது

தஞ்சையில் இருந்து காஞ்சீபுரத்துக்கு 1,200 டன் புழுங்கல் அரிசி சரக்கு ரெயிலில் அனுப்பி வைக்கப்பட்டது.

நெற்களஞ்சியம்

தமிழகத்தின் நெற்களஞ்சியமாக தஞ்சை மாவட்டம் விளங்கி வருகிறது. இங்கு குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல் சாகுபடி நடைபெறும். இது தவிர கோடை நெல் சாகுபடியும் நடைபெறுவது வழக்கம். இவ்வாறு சாகுபடி செய்யும்

நெல், தமிழக அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

இவ்வாறு கொள்முதல் செய்யப்படும் நெல், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கு அரவைக்காக ரெயில் மற்றும் லாரிகள் மூலம் அனுப்பி வைக்கப்படும். மேலும் தஞ்சை மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் அரிசி ஆலைகளுக்கும் அரவைக்காக அனுப்பி வைக்கப்படுவது வழக்கம். அவ்வாறு அரவைக்கு அனுப்பி வைக்கப்பட்ட நெல் பின்னர் பல்வேறு மாவட்டங்களுக்கு பொது வினியோகத்திட்டத்தில் வினியோகம் செய்ய அரிசி மூட்டைகளாக அனுப்பி வைக்கப்படுகிறது.

1,200 டன் புழுங்கல் அரிசி

அதன்படி தஞ்சை மாவட்டத்தில் உள்ள பல்வேறு அரிசி ஆலைகளில் இருந்து ஏற்றிவரப்பட்ட 1,200 டன் புழுங்கல் அரிசி மூட்டைகள் தஞ்சை ரெயில் நிலையத்துக்கு லாரிகள் மூலம் நேற்று கொண்டுவரப்பட்டன. பின்னர் அந்த அரிசி மூட்டைகள் தஞ்சையில் இருந்து சரக்கு ரெயில் மூலம் காஞ்சீபுரத்துக்கு 21 ரெயில் வேகன்களில் அனுப்பி வைக்கப்பட்டன.

## குறுவை சிறப்பு திட்டத்தில் நெல் நடவு பணி அதிகாரி தொடங்கி வைத்தார்

கும்பகோணத்தில் குறுவை சிறப்பு திட்டத்தில் நெல் நடவு பணியை மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சீனிவாசன் தொடங்கி வைத்தார்.

குறுவை சிறப்பு திட்டம்

குறுவை சிறப்பு திட்டத்தின்கீழ் விலையில்லா எந்திர நெல் நடவு பணியின் தொடக்க விழா கும்பகோணம் அருகே உள்ள கொரநாட்டுக்கருப்பூரில் நடந்தது. விழாவிற்கு மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சீனிவாசன் தலைமை தாங்கி, நெல் நடவு பணியை தொடங்கி வைத்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

விவசாய வேலைக்கு ஆட்கள் பற்றாக்குறை அதிகமாக உள்ளது. இதனை உணர்ந்த தமிழக அரசு, எந்திரம் மூலம் நடவு செய்யும் திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. குறுவை சாகுபடி திட்டத்தில் செயல்படுத்தப்பட்டு உள்ள எந்திர நடவு மூலமாக விவசாயிகள் ஆட்கள் பற்றாக்குறையின் தாக்கத்தில் இருந்து விடுபட்டு சிறந்த முறையில் சாகுபடி பணிகளை மேற்கொள்ளலாம்.

மானியம்

தற்போது விவசாயிகளுக்கு விலையில்லா நுண்ணூட்ட உரம் வழங்கப்பட்டு வருகிறது. பாய் நாற்றங்கால் அமைத்து நடவு செய்யும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வந்த மானியம் 4 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டு உள்ளது. குறுவை சாகுபடி செய்ய முடியாத இடங்களில் பல்வேறு மானிய திட்டங்களை அரசு செயல்படுத்தி உள்ளது. இதை விவசாயிகள் பயன்படுத்தி கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

விழாவில் கும்பகோணம் வட்டார உதவி இயக்குனர் லட்சுமிகாந்தன், கொரநாட்டுகருப்பூர் ஊராட்சி தலைவர் பகவதி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.